# SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

# ப்ரம்மவித்தியா

## அநுபந்தம்.

௰௧-ம்புத்] சிதம்பரம். ஏவிளம்பி௵ வைகாசி௴ 15௨க்கு 1897௵ மே௴ 27௨ [இல-௧.


### வைதிக சந்திரமௌலி
### மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.
முன்தொடர்ச்சி.

---

வெஶொக்தெநெ நவாரெமெண ஹஸ்தெநெவத்ரிபுண்
ட்ரகமண்டநம் நாவஶிஷ்யம் தினாஷ்டௌ வஹ
தாஜநா:| (கஅ)

வேதமார்க்கத்தைவிட்டு வேறுமார்க்கத்தில் திருநீறுதரித்தவன் பாஷண்டியென்று நிரூபித்த சூதசங்கிதை, கேவல பஸ்பதாரணத்தைச்சொல்லாது ஆகமதீக்ஷையுடன் கூடியதைச் சொன்னதென்றது மிகவும் பண்டிதரிடம் பரிபவப்படும். மேலும் வேதங்கள் எப்பொழுதும்ஆகமங்களை எதிர்நோக்காதனவென மேலே உதகரிக்கும்வசனங்களால் ஏற்படுதலால் அவற்றில் உள்ளவசனங்களுக்கு வேதவிருத்த சிவாகமாதிகளில் உள்ளதைப்பொருளாகக் கூறுவதுசர்வவிருத்தம். மேலும் சூதசங்கிதையில்:—

(கஅ) த்ரிபுண்ட்ரதாரணம் நாமாவோ ஜாபாலோ
க்தேநவர்த்மநா | தேவதேவஸ்ய விப்ரேந்த்ர ப்ரீதிகாரணம்||

ஜாபாலவுபநிடதத்துச் சொல்லப்பட்டவழிகொண்டு திரிபுண்டரம் உத்தூளனம் இவைசெய்வது பரமேசுவரனுக்குப்பெரியதோர் பிரீதிவிளைக்கும் என்று எக்ஞவைபவகண்டம் முப்பத்தோருவது அத்தியாயம் குறித்தலால் அதில்கண்ட கற்பாதிபேதங்களுக்கு முற்றும் விரோதமான ஆகமோக்த தீக்ஷாசகித விபூதிதாரணம் வேதசம்மதமும் புராணசம்மதமும் ஆகவே ஆகாது.

(கசு) ஹஸ்தேநாஶ்ரேண வேதெவ தயா த்ரியக்த்ரிபுண்ட்ரகம் | ஸோமாவாவிநாஶாய விபத்தெவெ
திகீஶ்ரௌதி:||

"பஸ்மோத் தூளனத்தையும் திரியக் திருபுண்டரத்தையும் மகாபாவனமாக வேதங்கள் விதிக்கின்றன": என்று இவ்விபன்னிரண்டுசுலோகங்களால் வேதத்தில் சொல்லப்பட்டதே அத்தியாச்சிரமிகளுக்குள்ள அத்யாச்சிரம தர்மமாய் திருநீறணிதல் என்று ஏற்படுதலால், அது தாந்திரிகம் என்ற சம்சயமே ஆரணங்களறிந்தவான்றோர்க்குண்டாகாது. அற்றேல், மேலே உதகரித்த காளிகாகண்டவசனம், இவ்வத்யாசிரம தருமமே சிவாகமங்களில் மந்திர சம்ஸ்காரதீக்ஷைஎனப்பட்டது என்றது அவலமோ எனில், அற்றன்று; கேவலம் அற்புத வாதமே. அப்படிக்கொள்ளாக்கால்மேற்கண்ட வசனங்கள் பல விபரீதப்படும். மேலும் சூதசங்கிதை யக்ஞவைபகண்டம் 28-ம் அத்தியாயத்தில்

(உ௰) ஜ்ஞாநம்கர்மவவேதொக்தம் ஸேவநாதுஸ்ரீதம் ஸதெகு| கர்மஜ்ஞாநாதிஷ்டம் விப்ரேந்த்ரா வ்யவஹாரெ
விவெகிநாம் | கவெக்ஷ்ய பௌதிகம் விஜ்ஞாநம் கர்மவேதி
வியீயதெ||

"ஞானமும் கர்மமும் வேதங்களில் சொல்லப்பட்டதே கொள்ளற்பாலது. மற்றது அல்ல. மற்றநூல்களில் சொல்லப்பட்ட கர்மஞானங்கள் சில அதிகாரங்களை நோக்கியெழுந்தனவெனவிவேகிகள் விவஹாரத்தமைந்தவிஷயம்" என்றுசொல்லப்பட்டமையாலும்வேதாதிரிக்த சாஸ்திரங்களின் ஞானம் கர்மம்இரண்டும் வைதிகரால் வேண்டப்படுவதில்லை எனஏற்படுதலாலும்அவர்க்கு அதிலாகவேண்டியதைக்காட்டும்சித்தாந்தம்பஞ்சடிவாரத்தில்பாராங்கல்லேற்றும்கட்டிடமாம்.மேலும்,

(உக) யஸ்ய விஜ்ஞாநஸம்பந்நா ஸர்வதந்த்ரெஷு நிஷ்டிதா| யயாயதிம் ப்ரஹ்மஜ்ஞாநம் திஷ்டாம் ஸர்வாஸுயம்||

"ஏவனதுண்மையறிந்தவர் எல்லாச்சிவாகமங்களையும் எதார்த்த பிரம்மவாதமாக நினைப்பார், அவ்வத்துவித வஸ்துவை வணங்குவோம்" என்றுரைத்து பிறகு 30-செய்யுள்களால் புத்தசார்வாகாகமங்களை பிரம்மவித்தையே என்று நிரூபித்தலால், அவைகளும் இவர்கொண்ட சிவாகமங்களும் வேதங்களும் ஒருபொருள் கொண்டனவாமோ ஆகாதாகாது, ஆனல் ஒருவிஷயமேதேனும் ஒத்திருப்பதைக் கொண்டு அதை யிதெனத்துதிக்கும் முறை இஃதாயின் திருநீறு என்ற விஷய வொற்றுமைபற்றி இக்காளிகாகண்டம் வைதிகாவைதிகதீக்ஷைகளைச் சம்மந்தப்படுத்தியதுகாண்க. நிற்க; பிரம்மகீதையில் ஒன்பதாம் அத்யாயத்தில்,

(உஉ) ஶ்ருதிஸ்ம்ருதிபுராணாநி ப்ரஹ்மரெகவ
ஸாதநம்:|

"வேதங்கள் ஸ்மிருதிகள் புராணங்கள் இவையெல்லாம் ஏகான்மவாதமே செய்தன" வென்றெடுத்து,

ஶைவாகமேஷ்வபி ப்ராயோ வேதம் ஸஹாத்வைதமீஶ்வர꞉ | ததாபி மானவாஸ்தத்து நைவ ஜானந்தி மானவா꞉ || (உங)

"சிவாகமங்களிலும் ஈசுவரன் ஏகான்மவாதஞ்சொன்னார். அப்படியிருந்தும் மனிதர் அதையறிவதில்லை" யென்றும், கூ-ம் அத்தியாயத்தில்,

ஸ்ம்ருதீநாம் ச புராணாநாம் பாரதாதே꞉ ஸ்ம்ருதேரபி | ததா ஶைவாகமாதீநாம் தர்காணாம் ச த்விஜோத்தமா꞉ | அத்வைதநிஷ்டதைவோக்தா ந த்வைதபரதா ஸதா || (உச)

"ஸ்மிருதிகள் புராணங்கள்பாரதம் முதலியவைகள் அங்ஙனமே சிவாகமாதிகள் தர்க்கங்கள் இவையெல்லாம் ஓ பிராமணோத்தமர்காள்! அத்துவிதத்தையே சொல்லுகின்றன. துவைதத்தையல்ல" வென்றும்,

ஏகாத்ம்யபோதகஸ்யாஸ்ய வேதவாக்யஸ்ய ஸுவ்ரதா꞉ | வாக்யாந்தராணி ஸர்வாணி ஶேஷபூதாநி நிஶ்சிதம் || (உரு)

"ஏகான்மஸ்வரூபத்தை நிரூபிக்கும் வேதவாக்கியங்களுக்கு மற்றையவாக்கியங்கள் எல்லாம் சேஷபூதமா" மென்று காணப்படுதலால் இவர் இதுகொண்டு ஆகமங்கள் ஏகான்மவாதசாஸ்திரங்கள் எனவும் அத்வைத சாஸ்திரம் எனவும் சொல்லத்துணிவாரா? ஒருசமயம் சொல்லொற்றுமை மாத்திரையால் ஒரு போலி அத்வைதமாக ஆகமத்தை இவர் சொல்ல முன்வந்தாலும் சூதசங்கிதை நிரூபித்த வழியில் அஃதமையாதல்லவா? அதுஎவ்விதம்ஒரு வழியாய்ச்சொல்லபேதமாத்திரையில் பொருந்தியதோ, அங்ஙனம் காளிகாகண்ட வசனப்பொருத்தமும் அவரே செய்துகொண்டடங்குவாராக. இவ்வித அவைதிக தீக்ஷையை வைதிகரும் செய்துவருகிறாரென நது பெரும்மயக்கச்சொல்லை மட்டும் கொடுக்கும். அவ்விதம் எழுதினாற்போதும். வடமொழியில் அமிர்தத்துக்கும் சுண்ணாம்புக்கும் 'சுதா' என்ற பெயரும், பஞ்சசாரைக்கும் சுக்கான்கல்லுக்கும் 'சர்க்கரை' என்ற பெயரும், தங்கத்துக்கும் உம்மத்தைக்கும் 'கனகம்' என்ற பெயரும், கௌரியம்மைக்கும் ஊனையிடும் கரிப்பேருக்கும் 'சிவை' என்ற பெயரும், இலக்குமிக்கும் தண்ணீர் விட்டான் கிழங்குக்கும் 'நாராயணி' என்ற பெயரும், திருமாலுக்கும் குரங்குக்கும் 'ஹரி' என்ற பெய்ரும் மற்றும் அனேகமமைந்தாற்போல இவ்வைதிகாவைதிக பஸ்மங்களுக்குப் பெயர் ஒன்றே யமைந்த ஓர் தௌர்ப்பாக்கியமே இவரை மயக்கியது. உண்மையில் வைதிகருக்குச் சூதசங்கிதை யக்ஞவைபவகண்டம் சுடு-ம் அத்தியாயத்தில்,

வேதாந்தார்த்தவிசாரஶ்ச வேதாந்யஸ்ய விஸ்ம்ருதி꞉ ||

வேதாந்தார்த்த விசாரமும் வேதமல்லாதனவற்றை மறத்தலுமே ஞானகாரணமென்றபடியாலும் வேறிடங்களில்,

வைதிகாநாம் த்விஜாதீநாம் ஶ்ருதிஸ்ம்ருத்யுதிதம் விநா | யத்கிஞ்சித் கர்ம குர்வாண꞉ பதிதோ நாத்ர ஸம்ஶய꞉ || ()

அதிகம் சொல்வதிற்பயனில்லை. வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் உள்ளதையன்றி மற்றதைச்செய்தாலும் பாபியாவான் என்றதாலும்,

வைதிகைரேவ ஸம்ஸ்காரை꞉ ஶிவபாவநயாபி வா ||

'வைதிகசம்ஸ்காரங்களாற்றானும் சிவபாவனையினாலும்' என்றதாலும் வைதிகனுக்கு வேத தர்மசாஸ்திர புராணாதிகளின்றி அவ்த்தியாஸ்தானங்களாக அவைதிகாகமங்களென்று கொள்ளத்தக்கனவல்ல. பரமப்பிரபலப் பிரமாணப்பெருமை நிறைந்த வைதிகசிகாமணிகளை இவர்காட்டும் பிரமாணங்கள்கட்டுப்படுத்துமேயானால்மந்திரபர்வதத்தின்மதலையொருவன் தாமரை நூலாற்கட்டித் தாழ்த்திடுவானும். அதையே பிரமகீதை இரண்டாமத்தியாயம்.

வேதமார்கம் பரித்யஜ்ய மார்காந்தரம் ஸமாஶ்ரித꞉ | ஹஸ்தஸ்தம் பாயஸம் த்யக்த்வா லிஹேத் கூர்பரமாத்மன꞉ || விநா வேதேந ஜந்தூநாம் [illegible] | [illegible] ||

இத்தகைய வேதமார்க்கத்தைவிட்டுவேறுமார்க்கத்தையடைந்தவர்கையிலுள்ளபாயசத்தையிழந்துபுறங்கையைநக்குவாரையொக்கும். இனிவேதவழியிலாதஜந்துக்களுக்குமுத்திகூடுமானால் அவர்இருளால்குருடராதிகளை நன்குகாண்பாரென்றும் சாட்டியது. இவ்வேதம் இவ்வளவு பெருமையடைவதற்குக்காரணம் யாதெனக்குறிக்குமிடமும்.

வ்யாவஹாரிகஸத்யாம்ஶம் ஸாக்ஷாத்ஸத்யார்த்தவேதனம் | உபயம் வக்தி வேதஸ்து மார்காந்தராணி நைவம் வதந்தி ஹி ||

வியாவஹாரிகசத்தையும் சாக்ஷாத் ஸத்தியார்த்தத்தையும் வேதங்களே சொல்லுகின்றன. மற்ற மார்க்கங்கள் அங்ஙனமல்லவென்றுகுறித்ததுகண்டறிக. மேற்காட்டியவனேகப்பிரபலப் பிரமாணங்களால் வாயுசங்கிதை சூதசங்கிதை இவைகளால் வைதிகன் உபநயனமாதி வைதிகசம்ஸ்காரம் பெற்றமைகொண்டே பஸ்மதாரணாதிகாரியாய் ஜாபாலாதியுபநிடதங்களில் சொல்லப்பட்ட முறைப்படி பஸ்மதாரணாதிகளைச் செய்வதே சிரோவிரதாத்யாசிரம பாசுபத சாம்பவாதி விரதங்களே யன்றி வேறுவிரதம்ஆகமாதிகளில் சொல்லப்பட்ட ஹௌத்திரியாதி தீக்ஷைகள் அச்சொற்கு என்றும் பொருளாகாதாதென முடிந்தது. இதனால்நமது ஐயர் 'மிக லேசாக அனலெறியவிபூதியையெடுத்து அக்னியாதிமந்திரங்கொண்டு சரீரமெங்கும் உத்தூளனத் திரிபுண்டரம் செய்துவிடுதல் பாசுபதவிரதமெனக் கொள்ளப்படாதென்றும், ஸ்காந்தபுராணம் காளிகாகண்டம் கைலாய சங்கிதை வாயுசங்கிதை சனத்குமாரசங்கிதை முதலியவைகள் கூறியவாறு ஆகமங்களிலே மந்திரசம்ஸ்கார தீக்ஷையெனப்படும் பாசுபத விரஜாதீக்ஷையை விதிப்படி யனுஷ்டித்து அக்னியாதி மந்திரங்கொண்டு பாதாதிகேசாந்தம் உத்தூளனத் திரிபுண்டரமாகத் தரிக்கப்படும். பராசத்தி சொரூப மகாவிபூதியே பாசம்போக்கவல்ல

வீரியமுடைய மகாபாசுபத சாம்பவ விரதமெனக்கொள்ளப் படுமென்றும் உணரற்பாறரும்' என்றும் நீட்டி முழக்கிய நிர்மூலசித்தாந்தம் சததமானவந்த (நாசம்) பெற்றமையின் சித்தாந்தமேயாயிற்று. இதற்கண்டபடி சனற்குமார சங்கிதையில் இவருக்குள்ள சாதகபாதங்களை அதனோர் பகுதியாய 'சிவதத்துவசுதாநிதி' யெனப்படும்மலயாசலகண்டத்தின் சிந்தாமணியைக் கண்டால் நன்கு விளங்கும். இவர் குறித்த மேதவா ரிஷிகள் எவரும் அனுஷ்டித்தது வைதிகபாசுபதமென்பதும் நாட்டப்பட்டமையின் அவ்வாக்கியமும் அனுவசியமாகவே துலைந்தது.

ஸ்ரீமதுபமன்யு பகவான் ஸ்ரீகிருஷ்ணனுக்குச் செய்தருளிய தீக்ஷையும் வைதிகமென்பதைக் காட்டுவோம். ஸ்ரீமகாபாரதத்தில் அனுசாசனிக உபமன்யூபாக்யானத்தில்.

ரக்ஷார்த்தம் மங்களார்த்தம் ச பவித்ரார்த்தம் ச பாமினி।
லிங்கார்த்தம் ச ஸர்வேஷாம் பஸ்ம தத்தம் புரா மயா॥

'ரக்ஷைக்காகவும் மங்களத்திக்காகவும் புண்ணியதீர்த்தத்திற்காகவும் அடையாளத்துக்காகவும் எல்லோருக்கும் பஸ்மம் என்னாற்கொடுக்கப்பட்டது' என்றுளது ''ரக்ஷை, பூதி, க்ஷாரம், பஸிதம், பஸ்ம'' என ஜாபாலவுபநிடதமும் குறிக்கும் ஐந்துதிருநாமங்களையும் முறையேபொருட்படுத்தியது. ரக்ஷைக்காகவென்றது ரக்ஷையெனும் சொல்லையும் மங்களத்துக்காகவென்றது பூதியென்றசொல்லையும் புண்ணியத்திற்காகவென்றது க்ஷாரம் என்றசொல்லையும் அடையாளத்துக்காகவென்றது பஸிதம் என்றசொல்லையும் விளக்க வெழுந்தமையால் பஸ்மம்என்றது எஞ்சிய பஸ்மம் என்றபெயராகவே அமைந்ததாம். இதையே முறையாக சூதசங்கிதையக்ஞவைபவகண்டம் 30-ம் அத்தியாயத்தில்:—

பஸ்மனோத்தூளனம் சைவ ததா த்ரிபுண்ட்ரதாரணம்।
ரக்ஷார்த்தம் ஸர்வஜந்தூனாம் விதத்தே வேதவித் ச்ருதி:॥
மங்களார்த்தம் ச ஸர்வேஷாம் விதத்தே வேதவித் ச்ருதி:।
பவித்ரார்த்தம் ச ஸர்வேஷாம் விதத்தே வேதவித் ச்ருதி:।
மாஹேச்வராணாம் சிஹ்னார்த்தம் விதத்தே வேதவித் ச்ருதி:॥ (௫௫)

பஸ்மத்தாலுத்தூளனமும் திரிபுண்டரமும்எல்லாவத்துக்களுக்கும்ரக்ஷார்த்தமாகவேதம்விதிக்கின்றது. புண்ணியார்த்தம்வேதம்விதிக்கின்றது. மாகேசுவரருக்குஅடையாளமாய்வேதம்விதிக்கின்றது. அங்ஙனமேசிவபுராணம் வாயுசங்கிதையும் 29-ம் அத்தியாயத்தில்:—

பாஸனாத் பஸிதம் ப்ரோக்தம் பஸ்ம கல்மஷபக்ஷணாத்।
பூதிர்பூதிகரத்வாச்ச ரக்ஷா ரக்ஷாகரீ ஸதா॥

பிரகாசம் உண்டாக்குவதால் பஸிதமெனவும் பாவங்களைப் பக்ஷிப்பதால் பஸ்மமெனவும் மங்களத்தைக்கொடுப்பதால் பூதியெனவும், ஸத்திக்களுக்கு ரக்ஷைசெய்வதாகவே ரக்ஷையெனவும் சொல்லப்படுமென்று பஸ்மத்தை ஜாபாலவுபநிடதத்தில் கண்டபடியே புகழ்ந்தது. ஆகையால் வேதங்களில் ஜாபாலவுபநிடதங்கூறியபடி செய்யப்படுமே பஸ்மதாரணமே மாபாரதத்தில் சொல்லப்பட்டது. மேற்கண்ட சிவபுராணம் மேற்கண்ட சங்கிதை பூர்வபாகம் ௩௰-ம் அத்தியாய இறுதியில் ஸ்ரீமதுபமன்யுபகவான் தனது தாய் உபதேசித்தருளிய பஞ்சாக்ஷரத்தையும் ஸ்ரீ க்ஷார பஸ்மத்தையும் கொண்டே சித்திபெற்றதாகச் சொல்லப்படுதலாலும் அவரடைந்த தீக்ஷையை முன்னத்தியாயம் குறிக்கும். அது சிவாகமப்பிரசித்த ஹௌத்ரியல்லவென்றும் வேருணமும் ஜாபாலத்தில் சொல்லப்பட்டதினதே என்றும் சொல்லப்படுதலால் அவ்வுபமன்யுபகவான் ஸ்ரீகிருஷ்ணனுக்குச் செய்வித்த தீக்ஷையும் வைதிக விரஜ தீக்ஷையயன்றி வேறல்ல. ஜாபாலத்தில் அக்னிஹோத்திர பஸ்மம் இரண்டும் சர்வசாதாரணவுத்தம பக்ஷங்களாகக்குறிக்கப்பட்டன. இவற்றுள் முதல் சிரௌதாக்னியில் வைதிக தீக்ஷையடைந்தவனுக்குள்ளது. 2-வது ஸ்ரீஹரதத்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியவாறு அத்வைதசுத்தியாகிய உபநயனம் செய்துகொண்டவனுக்கு உபயோகப்படுவது. வைதிகம் மூன்றக்னியிலும் உண்டாவது. ஸ்மார்த்தம் ஏகாக்னியில் உண்டாவது. அதில் ஸ்மார்த்தம சர்வசாதாரணமானது. அவரவாக்னியில் உண்டாவது அவரவருக்கேயுதவும். இவ்விஷயம் ஸப்ரமாணமாய் விரிவாய் சிவதத்துவசுதாநிதியின் உத்தரபாகத்துள் சிந்தாமணியிற்காண்க. இனி ஏகாக்னியாகிய ஸ்மார்த்தனுக்கு ஆத்மார்த்த பரார்த்த பஸ்மவிநியோக ஸித்திக்காக விதிக்கப்படுவது விரஜாபஸ்மம். ஆனால் அது முக்கியமாய் ஸந்நியாஸாங்கமாகவே பலவிடத்தில் விதிக்கப்பட்டமையால் அவ்விதம் சந்நியாஸம்பெறுவோன் எவனேனும் செய்தலே யுசிதம். ஆனால் சந்நியாஸிக்கு விரஜாஹோமம சந்நியாசி பூர்வாங்கமாக விதிக்கப்படுவது பெரும்பான்மையிலுளதேனும் சிறுபான்மையில் மற்றைய கிரகஸ்தாதிகளுக்கும் விதிக்கப்படுவதால் அதுவுங்கொள்ளலாம். ஆனால் முக்கியமாய் அக்னிஹோத்திர பஸ்மமே அதற்கு வைதிகதீக்ஷையாயுளது. மற்று ஸ்மார்த்தத்துக்கு ஸ்மார்த்ததீக்ஷையே. எதற்கும் ஆகமதீக்ஷை சம்பந்தமில்லை. ஸ்ரீசிவபுராணத்தில் சொல்லப்பட்ட தீக்ஷையும் மேற்போகும் சாயையில் அவன் முண்டிதனுவானென்றும், லஜ்ஜையொழித்து திகம்பரனுவானென்றும் மற்றுக் காஷாயம் தரிப்பானென்றும் சொல்லுகிறபடியால் சந்நியாஸபூர்வாங்கமென்றும் தோன்றுகிறது. இதுவே அத்தியாசிரமமென்று பிடிவாதப்பொருள்மட்டில் அங்கில்லை.

ஸோத்யாச்ரமீ ச விஜ்ஞேயோ மஹாபாசுபதஸ்ததா।
ஸ ஏவ தபஸாம் ச்ரேஷ்ட: ஸ ஏவ ச மஹாவ்ரதீ॥

"அவன் அத்தியாசிரமியும் மகாபாசுபதனும் தவசிலருட் சிறந்தவனும் மகாவிரதியும் அவனே" என அறியப்படுவோன்" என்று வாயுசங்கிதை கூறுதலால் அந்தபஸ்மயோகிக்கும் இப்பெயர் உண்டென்றேற்படுமேயன்றி இவனன்றி மற்றவர் அப்பெயருள்ளார் இல்லையென்ப ததன்கருத்தல்ல. அங்ஙனம் கொள்ளாது இவனே அத்தியாசிரமி என்றால் இதேவழியில் படிக்கப்பட்ட பாசுபதச்சொல்லும் மகாவிருதச் சொ

லும் அதே தன்மைபெற்ருல் அந்தோ! இவரே பாசுபதரும் மகாவிருதருமாக நேரிடும். ஆனல் பாசுபதத்தையும் மகாவிருதத்தையும் நிந்தித்தவசனங்கள் எல்லாம் இவர் தலைச்சுமையாம். பிறகு இப்புராணமே சிரோத்திராதிகளை யிகழ்வதால் அவ்விகழ்ச்சி இவ்வுத்தம சாம்பவனை இலக்காக்க நேரிடும். மேலும் வேதங்களில் குறிக்கப்பட்ட மகாவிரதக் கிரதவும், அக்கிரதுவை அனுஷ்டிப்பவனும் இதன் பொருளாக நேரிடின் மிகவும் விந்தையாய்முடியும். முன்னர் உதகரித்த உத்தமாதமப்பொருள் பெற்ற அமிர்தாதிசொற்களைப்போன்றதே இச்சொல்லுமாம். நிற்க, உபமன்யுபகவான், தான்பெற்ற தீக்ஷையைத் தானே தனது சீடனுக்கும் உபதேசிக்கவேண்டுமாதலால் அதுவும் வைதிக தீக்ஷையயன்றி ஆகமதிருஷ்ட குண்ட மண்டல வைதிகாதிசகித சிவாக்னி சாத்திய ஹௌத்ரியல்ல. ஆதலாற்ருன்.

ஸாயுஜ்யாய:வரஶோபாதா: ஶ்ரேஷ்டாநுஷ்டாநஶாலிந:। இதிஹாஸபுராணேஷு கதம் விதாநவ்யாஹ்ருத:। ஶிவாகமோக்தஸர்வஸ்வம் ஸம்ஹனனபோவ வ்யாஹ்ருத:॥ (௩௫)

என்று சொன்னவுடன் ஒருசமயம் அவ்வித வேதோபப்ருங்கணமான சிவாகமங்கள் காமிகாதிகளோவெனச் சங்கை தோன்ருவண்ணம். "ஶிவாகமோபி த்விவிய:" மன்று ஆரம்பித்து "காமிகாதிவ்யபதேஶேந' என்பதுவரை அவைதிகாகமங்களை விலக்கி பிறகு

ஶ்ருதிஸாரஶ்ச விஸ்தீர்ண: ஶதகோடிப்ரவிஸ்தர:। பரம் பாஶுபதம் யத்ர வ்ரதம் ஜ்ஞானம் ச கத்யதே॥

"மேற்கண்ட அவைதிகாகமங்களின் வேருய வேத சாரகமங்களே சதகோடி கிரந்தசங்கையுளது. அதில் பரமான பாசுபதவிரதமும் ஞானமும் சொல்லப்படும்" என்று வைதிகாவைதிகாகமவிபாகம் தெற்றென விளக்கப்பட்டது. மேல் இதே வைதிகாகமங்கள் தமக்கனுஷ்டான மென்றும் அதற்குத்தானுள்பட ருரு, ததீசி, அகஸ்தியர்சேர்ந்து நால்வர் பிரவசனகர்த்தர் என்றும், ஸ்ரீமதுபமன்யு கிருஷ்ணனுக்கு பதேசித்தார். மேல் கிருஷ்ணன் அந்த வைதிக சதகோடி விஸ்தார ஆகமங்களின் சொரூபத்தையும் அதன் ஆசாரியர்களையும் மற்றைய விஷயங்களையும் வினவியதற்கு விடையாய் உத்தரபாகத்தில் பல வத்தியாயங்கள் தோன்றின. இவற்றில் கண்டபடி வைதிகாகமங்களுட் கண்ட வேற்றுமையையும்வைதிக விரஜா தீக்ஷையையும்உபமன்யுபகவான் கிருஷ்ணனுக்குச் செய்வித்தாரெனவும் பிரமாணபூர்வம் காட்டுவாம்:-

1. சிவபுராணம் வாயுசங்கிதையில்—'சிவாகமோபித்விவித:' என்று வைதிகாவைதிக சிவாகமங்களைப் பிரித்து வைதிகம் வேதசாரமென்றும் அவைதிகம் சுதந்திரமென்றும் சொல்லி, 'ஸ்வதந்த்ரா ஆகமாஸ்ஸர்வே நிர்மூலா: பரிகீர்த்திதா:' என்றபடி ஒன்று வேதமூலமும் மற்றது நிர்மூலமும்சுதந்திரமுமென்றுஏற்பறெதென்பது.

2. வேதசாரகமம் சதகோடி கிரந்தமென்றும் அதற்குச் சங்கிதையுரைத்த ரிஷிகள் நால்வரென்றும் ஒவ்வொருயுகாந்தத்தில் கலியிலவதரித்த ஈசாம்ச பரமாசாரியர்களே இதற்காசாரியரென்றும், காமிகாதி ௨௮. வேறென்றும், அவை அமூலமென்றும் அனந்தமென்றும் ஏற்படுவது.

3. உத்தரபாகம் இரண்டாம் அத்தியாயம் துவக்கி ௨௧-ம் அத்தியாயம் வரை ௨௰- அத்தியாயங்களால் வைதிகாவைதிக சிவாகமவிஷயங்கள் விரிவாய் கிருஷ்ணனுக்கு உபமன்யு உபதேசிக்கத் துவக்கி 'ஆரம்பத்தில் கிருஷ்ணன் கேள்வியைக்காட்டி மேலே உபமன்யுபகவான் தேவியாருக்குத் தேவனால் உபதேசித்ததும், வேதசாரமுமான ஆகமதர்மத்தைச் சொல்வேன்' என்று பீடிகையிட்டு அதன் பிரமேயங்களைச் சொல்லுமிடத்து.

வேதாவிஷ்ஶதி தத்வாநி மாயாயா: கார்யமுச்யதே।

"இருபத்துநான்கு தத்துவங்களும் மாயையினது தொழிலும் இயலும் என்றும் வைதிகத்தில் தத்துவங்கள் இருபத்திநான்கு" என்றும்காட்டி மேலும் ஆரும் அத்தியாயத்திலும் அதேவித தத்துவங்களையும் உபதேசித்து பிறகு 15ம் அத்தியாயத்தில் சிவசாஸ்திரங்களில் தத்துவங்கள் 36 என்றது.

4. ௨-ம் அத்தியாயத்தில் மகதகங்காராதி சிருஷ்டிகளைக்குறித்துப் பிறகு சுத்தாசுத்த வித்தியாதிக்கிரம சிருஷ்டியைக்குறிதத்து.

5. ௩-ம் அத்தியாயத்தில் 'ச்ருதம் ச்ருதிமுகான்மயா' இந்தவிஷயத்தை வேதத்தால் கேட்டேன்' என்றும், கேனோபநிஷத்தை விரித்தும், ௬-ம் அத்தியாயத்தில் வேதவாதிகள் அபிப்பிராயம் என்றும், மேல் கடவல்லியாதிகளை விரித்தும் ௭-ம் அத்தியாயத்தில் தைத்தரீய மகோபநிஷத்தை விளக்கியும் ௮-ல் சுவேதாசுவதரோபக்கிரம மந்திரங்களை நிரூபித்தும், வைதிகத்துக்கு மூலங்காட்டியதுபோல அவைதிகாகமத்துக்குள்ள தீக்ஷாதிகளைச்சொல்லவந்த அத்தியாயங்களில் சொல்லவில்லை.

6, ஒன்பதாம் அத்தியாயத்தில்—

வேதாந்தஸம்மதம் ஸர்வம் ஸாம்க்யயோகவ்யவஸ்திதம்॥

ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்களிலும் சாங்கியயோகங்களிலும் எடுக்கப்பட்டதென்றும் 'சதகோடி கிரந்தங்களுளது' என்பதாதி லக்ஷணமுள்ளதென்றும் குறிக்கப்பட்ட வைதிகசிவாகமத்தின் விஷயங்களை வினவிய கிருஷ்ணனுக்கு அதைச்சொல்லவாரம்பித்தார்ஸ்ரீமது உபமன்யு பகவான்.

வேதைவம் ஸம்க்ஷிப்ய வேதோக்தம் ஶிவேந பரிபாஷிதம்। ஸ்துதிநிந்தாவிரஹிதம் ஸத்ய:ப்ரத்யயகாரணம்। குருப்ரஸாதஜம் திவ்யம் நாயம் வேதநோதிதம்। கமயிஷ்யாமி வேதந தவ்யம் ஶக்யாநவிஸ்தர:॥

'வேதத்திற்சொல்லப்பட்டதும், சிவனுல் விரிக்கப்பட்டதும், ஸ்தோத்திர நிந்தைகள் இல்லாததும் குரு பிரசாதத்தால் அறியப்படுவதும், அனுயாஸமாகமுக்திகொடுப்பதுமான

சைவத்தைச் சுருக்கிச்சொல்வேன். அதன் விரிவு கூற என்னால் முடியாதென்றும், இதே சாஸ்திரம் தேவர்களுக்கு ஈசன் கொடுத்த வரலாற்றையும் கூறி இதற்கு ஸர்வாகமோத்தமம் எல்லாவாகமங்களிலும் சிறந்ததென்ற பெயரும் கொடுக்கப்பட்டது.

ப்ரவதி (கம்வெராகெஷு நியொமாத்வரெஷு நः| உபாமஷ்யு நாமாணா ஊயீவெந ஹெஷிடு ணா| ஸ்யடவெவுவதீயெடுாவஹ்ராம் யாமாவல் தடுஷா ஶம்யகு| ஸாஶிரதாநாம் விஶாக்ருடும் கூமா தெஜா நவஸகம்| வ்யாஸாவதாரா ணியமா உா வாமாரிதெஷுாஸாவ்ருத || வொமாவாயடுாவதாரா ணிதயா திஷெஷ்ஷாஶவிநः || தத்ரதத்ர விஹொ ஶிஷ்யாஶ்சுவாரஸாஹெளஜஸः||

ஈசனது ஆணையால் என்னாலும் அகஸ்தியராலும் ருருவாலும் ததீசியாலும் வெளியிடப்பட்டது. அன்றி ஈசனேயுகாந்தரங்கடோறும் கலியில் அவதரித்துத் தன்னையண்டினவர்களுக்கு மோக்ஷசாஸ்திரவுபதேசம் செய்வார். துவாபரத்திறுதிதோறும் வியாஸாவதாரம்போல் யோகாசாரியருப சிவாவதாரம் கலிதோறும் உண்டு. ஆங்காங்கு அம்மகாத்துமாவுக்கு அவதாரந்தோறும் நாலு சீடர்கள்' என்று.

வதாஹிடுஸ ஹிதஶிஷெஷ்ய ஶங்கரொவதரிஷ்யதி|

"நான்கு சீடர்களுடன் சங்கரர் அவதரிப்பன்' என்ற சிவரகசிய வசனத்தைத் தழுவி, தனது சம்மதமும் அனேக வேதாசாரிய யோகாசாரியர் சம்மதமும் வைதிகத்துக்குக் காட்டியவாறு அவைதிகவாகமங்களுக்குப் பெரியோர் சம்மதி காட்டப்படவில்லை.

7. ஒன்பதாம் அத்தியாயத்தில்—

தத்ர வூஜாயிகாராதிःப்ரஹக்ஷத்ரவிஶாதிதி|

'அதில் பூஜாதிகாரங்கள்; பிராமண க்ஷத்திரிய வைசியருக்கே "என்று வைதிகத்துக்குக் குறித்தது; 13ம் அத்தியாயத்தில் அவைதிகாகமாதிகளைக் குறிக்கும்பொழுது.

ஶூஉராணாஉஞ்யஜாதீநாம் வதிதாநாம் விஶெஷதः| தயாஸம்கரஜாதீநாம்ஹாவஶாஜிவிடுயீயதெ|

'சூத்திரர்களுக்கும் அந்தியஜாதிகளுக்கும் விசேஷமாகப்பதிதருக்கும் அங்ஙனம் சங்கரர்க்கும் பாவசுத்தி இதனால்விதிக்கப்படுமென்று அவருக்கும் மனம் சுத்தமாயிருந்தால்தீக்ஷை செய்யலாம்' என்றும் வரம்பிலாவதிகாரம் காட்டியது.

8. பதினோராம் அத்தியாயத்தில் வருணாச்சிரமதர்மங்களை எடுத்து

வணாஶ்ரமாவாரொ உயாஹயः ப்ரகல்பிதः தஹிநக்தி தாஜெவ உதீயா நாஸவணிடுநாம்| கயிகாரெணவாஜெஷாம் உதராஜாஜெநஷிக்உஉ| உஷாஜூதெநஉாமெடுண வணிடுநா உஷாவாஶ்யாः| உஷ

ப்ராயாஷிவாஶெஷொ விஶாகாஉஸவ்ருஸாஷதः| வாராஉீயஉாஸாஷ்யவாநாவ்ருத்தீ வஜிடுதம்| வரஉஉஸாயஉடும்ப்ராவ்யநிவடுர தீஉாவ்யாயாः||

'எவனால் வருணாச்சிரமங்கள் ஏற்படுத்தப்பட்டன, அதில் பக்தி வைத்த எமதன்பர்க்கே இந்த வைதிகசிவாகமத்தில் (சாஸ்திரத்தில்') அதிகாரமென்பது எமது முக்கியமானவாக்கு. எனதாணைகள் தங்கியமார்க்கத்தில் உள்ள எமதன்பர் மலமாயாதி பாசங்கள் ஒழியப்பெற்று மீக்ஷியற்ற எமது பதவியை அடைந்து பரமமான எமது ஸாம்யத்தையும் பெற்று பரமுக்தியையும் பெறுவார்' என்றும், வருணாச்சிரமங்கள் ஈசாஞ்ஞாரூபங்கள்; அவையே சத்சாஸ்திராதிகாரரூபங்களென்றுங்காட்டி மேல் பெண்களுக்கதிகார விசாரம் செய்யும்பொழுது,

ஸ்த்ரீணாஞ்ஹதடுஶாஶ்ருஷா நாந்யாயஉடு ஸாஉஸதः| உஉவடுநம்வகுர்யாணிநியொமொஹதடுஸ்தவெஸு| யாநாரீஹதடுஶாஶ்ருஷாம் விஹாயவ்ரததத்வரா| ஸாநாரீநரகம்யாதி நாத்ரகாயடுாவிவாரணா| ஶாஶ்ருஷெதரவணாநாம் யஉடுஶூஷ்ரஸ்யகயூதெ||

'பெண்களுக்குக் கணவனடிதொழுதலின்றி வேறு தர்மமில்லை. ஒருக்கால் கணவனனுமதியிருந்தால் என்னைப் பூசிக்கலாம். கணவனனுமதியின்றி எந்தப்பெண் விரதங்கொள்வாளோ அவள் நரகம் அடையத்தடையில்லை. இதரவர்ணங்களுக்குச் சுச்ருஷை சூத்திரதர்மமென்று" வைதிகத்துக்குச் சொல்லி ௧௩ம் அத்தியாயத்தில் அவைதிகாகமாதிகாரியானவரைக் குறிக்குமிடம் மேற்காட்டியபடி பதிதரையும் அதிகாரியாகக்காட்டி பெண்களதிகாரத்தைக் காட்டுமிடம்—

ஊதடுாவெகவ்ரதிகூஉொயம்ப்ரஉாஷாகவொயயெத்வதிம்| கஶக்தாதம்வரித்யஜ்யஉநஸாயஉடுஉாவரொக||

'கணவன் பிரதிகூலமானால் அவனுக்கு மனமகிழ்ச்சியுடன் உபதேசஞ்செய்யவேண்டும். அதில் அசத்தையாயின் அவனை விட்டு மனதால் தருமத்தைச் செய்யவேண்டும்' என்றும்,

கஸ்வாதம்த்ர்யகுஜெதாஜொஷா நெஹாஸ்திவாரஉாயடுதः|

'பெண்களுக்கு இந்த வழியில் சுதந்திரம்' குற்றமாகாதென்றும் பூர்வவிருத்தமாகச் சொன்னது.

9. முன் இருபத்தொன்பதாம் அத்தியாயத்தில் 'பசும் பாசுபதம் யத்ர' என்றும்வைதிகசிவாகம சிரேஷ்டானுஷ்டானம் என்றும் அதிற்கண்டது. பாசுபதமென்றும் சொல்லி ஈண்டு பதிமூன்றும் அத்தியத்தில்.

ஸம்ஸ்காரஉவாரம்வாண்யம் ஶிவெநவரிஹாஷிதம்|

சிவனாலே சொல்லப்பட்ட அபாபுண்ணிய சம்ஸ்காரத்தைச்சொல்வேனென்று அபரமென்றது.

10. இறுதியில் முக்தி சொல்லுமிடம் வைதிகபாசுபதரே முக்திபெற்றார் என்றது.

11. 13-ம் அத்தியாயம் அவைதிகத்தில் யாகதூஷணஞ் செய்ததற்கு மாறுகக் கடைசி கர்மாத்தியாயத்தில் யாகஸ்தோத்திரஞ் செய்தது.

ஆகவே மேற்கண்ட பதினொருகாரணங்களாலும் வைதிகவிரஜாதீக்ஷையே ஸ்ரீமதுபமன்யுபகவான் பெற்றதும் விரித்ததும் உபதேசித்ததுமாகவே, இந்த அவைதிகவாதிகளுக்கு அது சிறிதும் பயன்படாமையின் அவர் மாபாரதம் தேடி வசனமெடுத்தது திருடன் தலையாரிவீட்டில் ஒளிந்தற்கொப்பாயிற்று. ஆதலாற்றான் ஸ்ரீகீதையிலும் ஸ்ரீமத் உத்தரகீதையிலும் ஆகமசம்மந்தமற்ற விஷயங்களை ஸ்ரீகிருஷ்ணனும் அர்ச்சுனனுக்களுக்குபதேசித்தார் என்றறிக. சிவகீதையோ, இவர் கொள்ளும் ஆகமார்த்தங்களுக்கு முற்றிலும் விரோதம். அது மற்றோரிடம் விரிப்பாம். இதனாற்றான் ஸ்ரீகண்டமுனிவரும் ஸ்ரீபாஷ்யத்தில் பாசுபத்தியாதிகரணத்தில் நிமித்த காரணவாதம் புரியும் அவைதிகபாசுபதரை மறுக்கும் இடம்.

ஶிவஶக்த்யாதிவ்யாப்த்யந்தம் ஶிவதத்வஸமுத்பவம்।
ஶிவேனைவ ததம் ஸர்வம் ஶூலினா காலிகம் யதா॥

'சிவசக்திமுதல் நிலமீறுகச் சிவதத்துவத்தில் தோன்றியதெல்லாம் சிவனாலேயே வியாபிக்கப்பட்டது. மண்ணால் குடம் வியாபிக்கப்பட்டவாறு' என்ற வைதிகசிவாகமசாரவாக்கியத்தையே எடுத்தார். ஆதலால் ஸ்ரீஹரதத்தமூர்த்திகளும் பஞ்சஸ்தானேஷு ஸமஸ்தாஸு யோ வா யோகீ ஸ: । 'ஐந்துதானங்களில் உம்மைப்பெறாத யோகி எவன்' என்று வைதிகாகமாசாரத்தையே குறித்தார். இவ்வளவால் இவர் கொண்ட காமிகாதி தாந்திரிகளுக்குப்பஸ்மதாரணவிதி அதே சிவபுராணத்தில் வாயுசங்கிதை உத்தரபாகம் கஅ-ம் அத்தியாயத்தில் 'சிவாச்சிரமிகளின் தருமத்தைச் சொல்வேன்' என்று தொடங்கி.

ஸாக்நிஹோத்ரஸமுத்பந்நம் த்ரிபுண்ட்ரம் ஸம்ஸ்தாநா
விதேய꞉। ஸவ்யஜாயம் ஸமுக்தம் வைராக்யமநுவாஸிநாம்॥
வ்ரதம் பாஶுபதம் வா விஷ்ணுர்யேந ஸேவிதா।
ஸர்வேஷாம் ஸ்ரத்தாவம்தம் ஸுவிதம் ஸம்ஸநாஸந꞉॥
தாத்ருஶம் ஸர்வஜ்யோதிர்லிங்கத்ரயே த்ரிபுராந்தகேன
விதேய꞉।
ஸர்வாங்கோத்தூலநம் சைவ ஸ்நாநம் த்ரிபுண்ட்ரம்
விதேய꞉। தஸ்மாத் த்ரிபுண்ட்ரம் சைவ காமிகேஷ்வேவ
ஸ்நாநவிநா॥

மேலும் சன்னியாசம் செய்துகொண்டு மந்திரதீக்ஷாவானாயுள்ளான் திரிபுண்டரத்தைத் திருநீற்றால் இடவேண்டும். அது கோணாதிருக்கவேண்டும். கோணவுடன் நெற்றியிற் சந்தனநீரால் இடலாம். வட்டமாகவாவது நான்கு மூலையாகவாவது அர்த்தசந்திராகாரமாகவாவது தரிக்கலாம். நெற்றியில் எவ்வித திருநீறணிவானோ அவ்விதமே மற்றைய அங்கங்களிலும் இடவேண்டும். சர்வாங்கோத்தூளனமென்பது திரிபுண்டரத்துக் கீடாகாது. ஆகையால் உத்தூளனத்தை விட்டுக்கேவலம் திரிபுண்டரம் தரிக்கவேண்டும்' என்றுள்ள செய்யுள்வரை விதிக்கப்பட்டது. இது இப்பொழுது நமது ஐயர் வைதிகருடன் தாயாதி பாத்தியங்கொண்டாடக்கொணர்ந்த அத்தியாச்சிரம சிரோவிரதங்களுக்கு முற்றிலும் விரோதம். முன்னர் வைதிக பாசுபதவிரதம் சொல்லுமிடம் அதாவது பூர்வபாகம் இருபத்தொன்பதாமத்தியாயத்தில் அதர்வசிரஸில் இருக்கும் மந்திரங்களால் உத்தூளனத்திருபுண்டரங்கள் விதிக்கப்பட்டன. இங்கு அவைதிகருக்கு விதிக்கப்பட்டனவாதலால் மேல் இவர் உதகரித்தனவும் உதகரிக்கப்போவனவும் வைதிக பாசுபதமகிமையை விளக்குவனவாகவே இவருக்குச் சிறிதும் சம்மந்தமும் சாதகமுமற்றன வென்க. அங்ஙனமாயினும் பிரதிவசனமாகக் கண்டிக்கலாகாதொழியின் சொற்பெருக்கமாத்திரையில் ஏதோ விஷயமுண்டென மயங்கும் பேதைகளுக்கு மனக்கலக்கமொழியாதாகவே அவைகளை முறையே விசாரித்து மந்தமதிகளுமறியுமாறு அவற்றின் இழிவைக்காட்டுவோம். இவர் இவ்வளவு ஸ்பஷ்டமாய் தான் அவைதிகராயிருக்க, வைதிகவிரஜாதீட்சிதராக வைத்தது அந்தோ! சுபாவ வைதிகராய சாம்பவமணிகளை அதற்குப் பாத்யமற்றவரென்று வாதிக்கவந்தது எமக்குப் பெரிய ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. அந்தோ! வேதவிதிப்படி விவாகஞ்செய்த தர்மபத்தினிக்கு ஜீவனாம்சம் கூடக்கிடைப்பது அரிதாயிருக்க, வைப்பாட்டி மகனுக்குத் தகப்பன் என பெயர்வைத்தவன் சொத்துக்கிடைப்பதும் பார்ப்பதும், இயல்பான காலத்துக்கிது ஒரு ஆச்சரியமா? அக்னிமுதலிய மந்திரங்களால் விபூதிதரித்தல் ஆகமிகளுக்குக்கிடையவ்வ கிடையாது. ஆதலாற்றான் 'சகலாகமசங்கிரகம்' என்ற ஆகமநூலில் திருநீறணியும் வழி சொல்லுமிடம்—

லிங்காகாரம் தீபாகாரம் அர்த்தசந்த்ரம் த்ரிபுண்ட்ரகம்।
வர்துலம் சோத்தூளநம் சைவ ஷட்விதம் ஶிவஶாஸநாத்॥

லிங்காகாரம் தீபாகாரம் அர்த்தசந்திரம் திரிபுண்டரம் வட்டம் உத்தூளனம் ஆக புண்டரம் ஆக அறுவகை 'சிவவாக்கியத்தில் என்று சொல்லி மேலே இதை வருணபேதத்தால் பிரித்து ஏதேதோ எழுதப்பட்டிருக்கின்றது. ஸ்காந்தம் சனத்குமாரசங்கிதையில்.

நவர்துலம் சோர்த்வாகாரம் த்ரிஶூலாகாரமேவ ச।
அர்த்தசந்த்ரம் சதுஷ்கோணம் ...

வட்டமும் ஊர்த்துவாகாரமும் சூலம்போன்ற முக்கலையும் அர்த்தசந்திரனும் நாற்கோணமும் கூடாதென மறுத்து

யாவத் ஸர்வதாக்நிஹோத்ரஜம் பஸ்ம வைதிகம்
வைதிகை꞉।

'எப்பொழுதும் பரமவைதிகமான அக்னிஹோத்திர பஸ்மமே வைதிகரால் தரிக்கப்படவேண்டும்' என்று முக்கியமாகவெடுத்து விரஜாபஸ்மத்தை அனுகற்பமாக்கி 'எந்த பஸ்மமாவது தரிக்கவேண்டும்' என்றுபசங்கரிக்கப்பட்டது. அங்ஙனமே ஜாபாலவுபநிடதத்திலும் லௌகிகபஸ்மத்தையுமெடு

த்து மந்திரங்களால் அபிமந்திரித்துத் தரிக்க விதிக்கப்பட்டது. அதன் விவரம் அதே உபநிடதத்தில் காணலாம். இனி அவர் எடுத்த வசனங்களைப்பற்றிச் சொல்வாம்-

ஷ்டெநஷ ெஜதாவிெவு்ண ஊீக்ஷிெதாஹம்யயாவியிம்॥

'எட்டாந்தினத்தில் நான் (கிருஷ்ணன்) 'விப்பிரராக உபமன்யுவால் சாஸ்திரோக்தமாக தீட்சிக்கப்பட்டேன்' என்பது. இது மேலே காட்டியவனேக சத்பிரமாணங்களால் வைதிக விரஜாதீக்ஷாவிஷயமாகவே அவர் விபரீத சைவாகம தீக்ஷை பெற்றதாக இதற்குப் பொருளுரைத்தல் கூடாது. ஏனெனில்,

த்ரிவும்ப்ரும்வஸாரவிவுாணாம்வதகூஜம்ராஜெவெ ஶ்யெபா:॥

தேவர்களுக்கும் அந்தணர்களுக்கும் திரிபுண்டரம் என்றும் அரசருக்கும் வைசியருக்கும் வட்டம் என்றும் தசதிகாலோத்திரவசனத்தாலும் ஷை சிவபுராணவசனத்தாலும் உத்தூளனமில்லாத வட்டவடிவமான புண்டரமே க்ஷத்திரியர்க் சேற்படுதலால் அதை முற்றிலும் விட்டு கண்ணன் ஸர்வாங்கோத்தூளனம் திரிபுண்டரம் இரண்டையும் தரித்ததாக ஹரிவம்சத்தில் சொல்லப்பட்டமையால் என்க. ஹரிவம்சத்தில் கிருஷ்ணன் புத்திரன்வேண்டி சுதந்திரார்த்தமாகத் தவஞ்செய்தாரென்ற விடம்.

ஹாஸ த்ரிவும்ப்ராஹஸிெதஸிதஸாநுெஜளநீ ஜடீவஜூவாநுக்ஷஜ:। திவஸம்வெதஸி வஷ்வஶ ஸம்விஹாவயநுவம்வஜஜாவவணநூ॥

'திருமேனியிற் றிருபுண்டரம் துலங்க உடலெல்லாம் நீற்றினால் வெளுத்திட மௌனவிருதங்கொண்டு ஜடையும் மரவுரியுந்தரித்து இடையரூது சந்திரகண்ட சிகாமணியை மனத்திருத்தி ஐந்து எழுத்துக்களைக் கண்ணன் ஜபித்தார்' என்று ஸ்பஷ்டமாய் ஸ்ரீகிருஷ்ணன் திரிபுண்டர உத்தூளனங்களைச் செய்துக் கொண்டதாகத் தெரியவருகிறது. ஸ்ரீசிவபுராணத்தும் இதேதவமும் அதற்காகவே தீக்ஷையும் சொல்லப்பட்டது. உத்திரபாகம் இரண்டாம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டது. ஆகையால் மேற்கண்ட வசனங்கள் அவைதிகாகமிகர்களுக் கேதும் சாதகமில்லையாயினும் பாதகமுண்டு. மேலும் பாரதத்தில் சாந்திர பர்வத்துள்ள மோக்ஷதருமத்தில் இவர்கொண்ட சைவாகமம் வேதங்களிலும் வேறாயதென்று ஸ்பஷ்டமாய் ஓதிக்கப்பட்டமையானும் அந்தச் சிவாகமத்தைத் தழுவுவது அவ்வளவுசிதமாகாது. மோக்ஷதர்மம் பஞ்சமத சித்தாந்தாத்தியாயத்தில்.

ஸாம்வ்யம்யொமஃவாம்வராத்ரம் வெஷா:வாஶவ தம்தயா। ஸ்ரானாநெநு்தா நிரஜஷெவிஷி நா நா ஜதா நிெவெ॥

சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், வேதங்கள், பாசுபதம் இவைகளெல்லாம் வெவ்வேறு பிரஸ்தானங்களென்று ஸ்பஷ்டவசனமுண்டு. மேலும் 'தீக்ஷித:' என்ற சொன்மாத்திரையில் அவைதிகாகம தீக்ஷை அர்த்தமாகுமானால் வேதங்களில் 'தீக்ஷித:' என்ற சொல்லிருத்தலால் அவைகளுக்கும் அதே பொருளிருத்தல் பொருந்துமே. ஒரு ஆண்டி பசியால் வருந்திக்கிடக்க, ஒரு தாதன் "கஞ்சிவரதப்பா" என்றான். அதைக்கேட்ட ஆண்டி வாரிச் சுருட்டி எழுந்து "எங்கே வரதப்பா' என்று வினவியவனை எதிர்கொண்ட கதைபோலிதுவுமிருக்கின்றது. பாருங்கள்! தீக்ஷித: என்ற சொல்லைக்கேட்டாற்போதும். தமக்கும் அதற்கும் ஏதோ ஒரு பெரும் பொருத்தமிருப்பதுபோல் தேடியோடி வருகின்றார். இவையெல்லாம் ஓர் புறங்கிடக்க; இவர் எடுத்துக்காட்டிய 'சிரோவிரதமென்ற சொல் ஒருவழியாக ஒழிந்தது. அத்தியாசிரமமென்பதும் ஸந்நியாஸத்தைக் குறிப்பதுமே. அவ்வாச்சிரமமும் ஆச்சிரமங்களில் மிகச்சிறந்ததாகையால் அதைப்பெற்றோருக்குரிய தருமாகும். இதை 'அத்தியாச்சிரமதர்மம்' என்பதே நியாயம். ஆதலாற்றான் திருநீறணிசல் விசேடமென்று பரமஹம்ஸ சன்னியாசிகளுக்குச் சிறந்த தருமமாக நாரதபரிவ்ராஜக சந்நியாஸாதி உபநிடதங்கள் சொல்லுகின்றன. இவ்வுண்மையையும்ப்ரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அருளிச்செய்த கலிகண்டகோத்தாரம் குருசரணபூஷணம் இவற்றில் காணலாம். ஆகவே இவ்வசனங்களால் தமக்கு ஏதோ சிறிது சித்தாந்தப்பற்றுக்கோடு அகப்பட்டதாக நம்பி முன்வந்த காசியார் சித்தாந்தசூன்யராயினர். மேலே 'இவ்வசனவுண்மைகளையறியாது பொருட்படுத்திய குறறம் எம்மட்டோடமைந்ததல்ல. எமது பூர்வாசாரியரும் இங்ஙனமே இப்பொருண்மயக்கங்கொண்டார்' எனக்காட்டுவாராய்ச்சில தென்னூலார் செய்யுள்களை எடுத்துக்காட்டினார். அவைகளுள் முதலிற்காட்டியது உமாபதிசிவாசாரியார் வசனம். அது சிதம்பரமான்மிய மொழிபெயர்ப்பு. அதில் ஆகமவாடையே இல்லை. மூலவிருத்தமான மொழிபெயர்ப்பு அவ்வளவுசிதமோவெனில் அதை அறிஞரே அறிவார். மேலும் தந்திரங்களில் சொல்லப்பட்ட விஷயங்களை அனுவதித்தலும் புராணங்களுள் ஏகதேசமாக உண்டென முன்னரே குறித்தோமாகையால் இது ஒரு பெருங்காரணமாகவுமாகாது. வேதங்கள் வேதாந்தங்கள் இதிகாசங்கள் புராணங்கள் எல்லாம் ஒருங்குசேர்ந்து ஒருபொருளைக்குறிக்குங்கால் அதற்கு மாறாக வெழுந்த வேறொரு புராணலேசம் மேற்கண்ட பிரமாணங்களின் முன் பிரளயகாலாக்கினியின் முற்பட்ட பஞ்சுத்திபோல் பிரகாசிக்குமாம். அப்படியாகவே நேரில் ஸ்ரீசிதம்பரமாகாத்மியத்தை வடசொல்லிற்றவறாது விசாரிக்க வாற்றல்பெற்ற வைதிகர்க்கு அதன் மொழிபெயர்ப்பை எதிர்பாக்கவேண்டிய அவசியமில்லை. சக்கிரவர்த்தியின் திருமகளை மணக்கச் சர்வகுணங்களும் பொருந்தியதுரைமகனுக்கு அவள் திருவுருவப்படத்தைக்கண்டு களித்தல் உசிதமோ, நிற்க, இவர்கூறியவாறு அவ்வசனமாயினும் இவர்கொண்ட வழிபற்றியதல்லவெனக்காட்டுவோம். ஸ்ரீமத் தியாகராஜப் பெருமான் திருவாய்மலர்தருளிய வைபவத்தைப் பெற்ற சுத்த வைதிகாக்னிஹோத்திர பராயண தில்லைவாழ்ந்தண மூர்த்திகளின் பெருமையை அளவுக்கு மேற் பெருக்கவெழுந்து அவர்களுக்கு அந்தேவாலய பூஜாவிதி முதலியன ஸ்ரீவைதிக குலோத்துங்க

மகாமுனி சிகாமணியாய ஸ்ரீ-பதஞ்சலி பகவானால் செய்யப்பட்டதே" என்று குறித்த சிதம்பரமாகாத்மியம் அந்தோ! அவைதிகசிவாகமப் பிரசித்த சமயாதி ஹௌத்திரியைச் சொல்லியதாம். பாருங்கள்! உண்மை நாயன்மார் அறுபத்துமூவருள் முதன்மைபெற்ற பரசமயகோளரியும் கௌண்டின்யகுல சூளாமணியும் ஸ்மார்த்தப்பிராமணகுலபாலாழிகௌஸ்துபமாய எமது குலாசாரியரான ஸ்ரீஜகத்குருநாதன் புகழ்ந்த தமிழ் மதலையாய மாசிலாமாதேவரடியார்மணி ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திகள் அருளிய கோயிற்றிருப்பதிகத்தல்—

கற்றுங்செரியோம்பிக் கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
முற்றுவெண்டிங்கள் முதல்வன்பாதமே
பற்றுநின்றாரைப் பற்றுபாவமே. என்றும்,

"பறப்பைப்படுத்தெங்கும பசுவேட்டெரியோம்பும்" என்றும், அக்னிஷ்டோமாதி மகாயாகதீக்ஷைகளை நிறைவேற்றிய தீட்சிதமூர்த்திகளைத் துதிக்கவும் அவ் வாளுடைய பிள்ளையாரும் ஸ்ரீ சிவபாதவிருதய தீட்சிதமணிகள் அரும்புதல்வராயிருக்கவும் யாககாலத்தில்—

"நாமஸூநோர் க்ருஹ்ணாதி நம்"

என்ற கிரியையில் எஜமானன் பிள்ளைகளின் பெயரையெடுத்து அவருக்கும் தர்ப்பிராமண்யம் நிவர்த்திக்கும் முறை விதிக்கப்பட்டமையால், ஸ்ரீசிவபாதவிருதய தீட்சிதமூர்த்திகள் செய்த ஸோமயாகத்தில்—

'ஜ்ஞானஸம்பந்தஸ்ய ஶர்மண: பிதா யஜதே'

(ஞானசம்பந்த சர்மாவின் தகப்பன் யாகஞ்செய்கிறான்' என்று சாமகர் கானஞ்செய்யவும் தர்சபூர்ணமாச இஷ்டியில் "ஞானசம்மந்தசர்மணே" என்று இருமுறை எடுக்கப்படவும் ஜனனகாலத்தில் ஜாதேஷ்டியால் சர்வமங்கள சாஸனங்களையும்பெறவும், தீட்சிதபுத்திரர் தீட்சிதத்தன்மைபெறவும், மறைவல்ல ஞானசம்மந்தன் 'வைதிகவாரணன்' என்பதாதி சர்வப்பிரசித்த ஸ்ரீமத் பகவதி நங்கையார் (யாகதீக்ஷைபெற்ற தர்மபத்தினிகளுக்கு நங்கையாரென்று வழங்குவது) புதல்வர் திருவவதாரமமைந்தமையானும் அவ்வித யாகங்களை நிந்திக்கும் அவைதிகாகமங்கள் அம்மகான் திருமுறையைப்பற்றியவர்க்கு அடுக்குமோ. மேலும் 'வேதவேள்விகள் நிந்தனைசெய்துழல்' என்பதாதிப் பலகோடி வசனங்களால் வேதவேள்வி நிந்தனைகள் அமணர் இயல்பென்றும், 'வாழ்கவந்தணர்'யென்பதாதிகளால் அந்தணர் வாழ்வு உலகத்துக்கு க்ஷேமமென்றும் அனேகமாய்ப் பதிகங்கடோறும் வேதவேள்விகளைப்புகழ்ந்தும் உள்ளார். சிலவிடத்தேனும் ஆகமத்தையும் தீக்ஷைகளையும் புகழ்ந்தாரில்லை. எடுத்தாருமில்லை. இதனுண்மையைத் தேவாரங்களை ஓதியுணரவேண்டும். ஆகையால் தில்லைஸ்தலம் சுத்தவைதிகமாகவும், ஸ்ரீசிதம்பர தத்துவரகஸ்யம்வைதிகபரார்த்த பூஜாமீமாம்சாதிகளில்விரிந்துகிடக்கவும், அத்தலபுராணம் ஆகமதீக்ஷையைக் கூறியதென்பது 'அகன்டப்பிரசண்டத்தில் அகங்கையவ்வளவு இருளிருக்கின்ற'தென்பதுபோலாம். மேலும் இவர்காட்டிய வசனம் இருக்குமிடத்தைப்பரிசோதித்தால் நிச்சயமாய் அதுவும் வைதிகவிரஜாதீக்ஷையையே சொல்வதாய் ஏற்படும். அவரது அடுத்த வசனத்தைப்பாருங்கள்.

உக்தோ ஹி தேவகீஸூநோர் திவ்யபாஶுபதீக்ஷயா|
உதஸ்மிவாமஹாயோகாம்ஶ ஸக்ருஷ்ணோ போதிதோ
வாஸு||

'இதனாலே தேவகீபுத்திரனுக் குபமன்யு தீக்ஷைசெய்து இதனால் கிருஷ்ணனுக்குச் சிவாகமார்த்தங்களைப் போதித்தா'ரென்பது. இக்கதை ஸ்ரீசிவபுராணத்துள்ளபடி எடுத்துக்காட்டினோமாதலால் இதற்கு அவர்கொண்டபடி ஆகமங்களிலுள்ள தீக்ஷை அர்த்தமாகாது. மேலும் ஸ்ரீமதுபமன்யுபகவானுக்கே ஆகமதீக்ஷையில்லையாதலால் இவர் மற்றவருக்குத் தீக்ஷை செய்வதுதல் எப்படி? மேலும் உபமன்யுவிடத்தில் சைவதீக்ஷைபெற்ற கிருஷ்ணன் யுதிஷ்டிரருக்குப் பாஞ்சராத்திரத்தையுபதேசித்ததுபோல, வைதிகசிகாமணியாகியஉபமன்யு கிருஷ்ணனுக்கு அவைதிகாகமங்களைப்பற்றி உபதேசித்தாரென்க. அங்ஙனமாயினும் சிவபுராணம் வாயுஸம்ஹிதையில் உத்திரபாகத்தில் அவைதிகாகமங்களைப்பற்றி விரித்துவருகையில் கிருஷ்ணன தன்னையும் அவைதிராக நினைப்பாரோவென்று ஆசங்கித்து 26-ம் அத்தியாயத்தில் ஸ்வதர்மமதெனக்காட்டினார். ஷை அத்தியாயத்துவக்கத்தில்—

அத: பரம் ப்ரவக்ஷ்யாமி கேவலாமுஷ்மிகம் ஶிவம்|
யேந ஸத்ருஶம் கிஞ்சித் கர்மாஸ்தி ஜகத்த்ரயே||
புண்யாதிஶயஸம்யுக்தம் ஸர்வதேவைரநுஷ்டிதம்
ப்ரஹ்மணா விஷ்ணுநா சைவ ருத்ரேண ச விஶேஷத:
இந்த்ராதி லோகபாலைஶ்ச ஸூர்யாத்யைர் நவ
பிர்க்ரஹை: || விஶ்வாமித்ர வஸிஷ்டாத்யை: ப்ரஹ்ம
வித்பிர் மஹர்ஷிபி: || ஶ்வேதாகஸ்த்ய ததீசாத்யை
ரஸ்மதாதி ஶிவாஶ்ரிதை: || நந்தீஶ்வர மஹாகாலசண்
டேஶாத்யைர் கணேஶ்வரை: || பாதாளவாஸி
பிர்தைத்யை: ஶேஷாத்யைஶ்ச மஹோரகை: ||
ஸித்தைர்யக்ஷைஶ்ச கந்தர்வை: ரக்ஷோபூதபி
ஶாசகை: || ஸ்வம் ஸ்வம் பதமநுப்ராப்தம் ஸர்வைரேதத்
அநுஷ்டிதம் || அநேநைவ விதாநேந தேவா தேவத்வமா
கதா: || உக்தம் ஏதத் த்வயா ப்ராப்தம் வக்
தவ்யம் நைவ கஸ்யசித்||

"இனி கேவலாமுஷ்மிகத்தைச் சொல்வேன். இதற்குச்சமமான கர்மம் ஏது மூவுலகத்துமில்லை. இது மிகப் புண்ணியம் நிறைந்ததே. எல்லாத் தேவர்களாலும் அனுஷ்டிகப்பட்டது. பிர்ம்மா, விஷ்ணு, ருத்திரன், இந்திராதிலோகபாலர்கள், ஸூர்யாதி ஒன்பது கிரகங்கள், விசுவாமித்திரர், வஸிஷ்டராதி பிரம்மநிஷ்டரான மகரிஷிகள், சுவேதர், அகஸ்தியர், மற்றவர், யாம்முதலிய சிவாசிரிதர்கள் நந்தீசுவரர் மகாகாளர், சண்டேசுவரர்முதலிய கணநாதர்கள், பாதாளவாசிகளான 'ராக்ஷஸர்' சேஷாதிநாகர்கள், சித்தர், யக்ஷர் கந்தர்வர், ராட்சதர், ரக்ஷஸ்ஸு, பூதங்கள், பிசாசங்கள் இவர்கள் எல்லாராலும் அனுஷ்டிக்கப்பட்டனவாதலால் அவரவர் அவரவர்பதவியைப்பெற்றார். இதேவிதியினால் தேவர் தேவத்துவம் பெற்றார்கள்" என்று ஆரம்பித்து "பக்தனான உனக்குச்சொன்னேன் வேறு எவருக்கும் சொல்லக்கூடாது' என்றுநிரூபிக்கப்பட்டது.

இன்னும் வரும்.